# நேஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி.

## முதன்மை விடயங்கள் குறித்த ஆவணம்

செயற்திட்ட நிதி வழங்கல்

# முதன்மை விடயங்கள் குறித்த ஆவணம் - செயற்திட்ட நிதித்துறை

| சேவை | விபரக் குறிப்பு | நிதி மற்றும் ஏனைய அனுகூலங்கள் | பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் | முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| **செயற்திட்ட நிதித்துறையிடம் இருந்தான தவணைக் கடன்கள்** | புதிய செயற்திட்டங்கள், விஸ்தரிப்புகள், ஐந்தொகை மீள்கட்டமைப்பு, நீண்ட கால நிலையான செயற்படு மூலதன கோரிக்கைகள் மற்றும் இன்ன பிற தேவைகளுக்கான நிதியீட்டலை அளிக்கும் நீண்ட கால தவணைக் கடன்கள் | இந்த சேவையானது வாடிக்கையாளர்கள் அமுல்படுத்த விழையும் செயற்திட்டங்களுக்குத் தேவையான நீண்ட கால அடிப்படையிலான கடன்களைப் பெறுவதிலுள்ள இடைவெளியினைக் குறைக்கும் | 1. தலைவர் – செயற்திட்ட நிதித் துறை அவர்களை 2347912 அல்லது 2448448 (Ext 3387) என்ற இலக்கங்களின் ஊடாக தொடர்புகொள்ளுங்கள்<br>2. குறித்த தொழிற்துறை சார்ந்த பொருத்தமான தொடர்பாடல் முகாமையாளர் அல்லது பிரிவு தலைவரை, திட்ட செயலாக்க ஆய்வு மற்றும் பொருத்தமான துறைசார் அதிகாரிகளிடமிருந்து பெற்ற அனுமதி ஆகியவற்றுடன் சென்று சந்தியுங்கள்<br>3. தொடர்பாடல் முகாமையாளர், தேவையேற்படின் திட்ட செயலாக்க ஆய்வு மற்றும் கோரிக்கை குறித்த விளக்கங்களை விளக்கங்கள் பெறும் வகையில் ஆய்வு செய்வார்.<br>4. முதன்மை விதிகள் மற்றும் நிபந்தனைகள் / விலைமனுக்கோரல்கள் ஆகியன தொடக்க நிலை மதிப்பாய்வுகளின் பின்னர் வாடிக்கையாளரிடம் சமர்ப்பிக்கப்படும். வாடிக்கையாளர் இதனை ஏற்றுக்கொள்ள கோரப்படுவார்<br>5. விலைமனுக்கோரலை ஏற்றுக்கொள்வதாக சம்மதம் தெரிவித்தல் கிடைக்கப்பெற்றதும், வர்த்தக வழிமுறை பிரிவானது, முதன்மை அனுமதியைப் பெறும் வகையில், முதன்மை அறிக்கையினை கடன் வழங்கல் குழுவுக்கு அனுப்பி வைக்கும்.<br>6. முதன்மை அனுமதி கிடைக்கப்பெற்றதும், விரிவான தீங்குக் குறைப்பு ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்<br>7. முற்காப்பு ஆய்வுக்கான காலப்பகுதி, குறித்த திட்டத்தின் சிக்கல் நிலை மற்றும் வாடிக்கையாளரினால் கையளிக்கப்பட்ட தகவல்களின் மட்டம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடலாம்.<br>8. குறித்த கடனுதவியை அளிப்பதற்கான வழங்கல் கடிதம் /ஒப்பந்தம் ஆகியன, தீங்குக் குறைப்பு ஆய்வுகளின் முடிவில் வாடிக்கையாளரின் ஒப்புமைக்காகவும் பொருத்தமான அதிகாரிகளின் அனுமதியைப் பெறும் வகையிலும் அனுப்பிவைக்கப்படும்<br>9. கடன்வழங்கல், உடன்பாட்டு இலக்குகள் மற்றும் உடன்பாட்டு கடன்: உரிமை முதல் விகிதம் அடிப்படையில், சட்டபூர்வ /பாதுகாப்பு ஆவணங்கள் நிறைவேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும்.<br>10. வங்கி அதிகாரிகள் தீங்குக் குறைப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் காலப்பகுதியில், குறித்த செயற்திட்ட தளத்திற்கு /நிறுவனத்திற்கு ஆய்வு விஜயங்களை மேற்கொள்வர்<br>11. **முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகள்** - செயற்திட்ட நிதி உதவி | தொடர்வன செயற்திட்ட நிதி வசதிகளுக்கான நியம நெறிமுறைகளாகும். எனினும், செயற்திட்டங்கள் ஒவ்வொன்றின் இயல்பு மற்றும் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் ஆகியனவற்றின் அடிப்படையில் இவை மாறுபாட்டுக்கு உட்படக்கூடும்.<br><br>***1. நிதியீட்டக் கட்டமைப்பு***<br>▪ கடன்: உரிமைமுதல் - 60:40<br>▪ உரிமைமுதல் பங்களிப்பு முன்னதாகவே அளிக்கப்பட வேண்டும்.<br>***2. வட்டி வீதம்***<br>▪ ஒவ்வொரு மாதமும் செலுத்தப்படலாம்<br>▪ ரூபாய் கடனுதவியின் அடிப்படையில் - இடையில் AWPLR + 2.0% p.a முதல் 3.0% p.a<br>▪ USD கடனுதவியின் அடிப்படையில் - இடையில் LIBOR + 6.00% p.a முதல் 8.5% p.a<br>▪ வட்டியானது, குறைந்து கொண்டு செல்லும் மீதி மற்றும் மாதத்தின் நிறைவில் செலுத்தப்படக்கூடிய தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படும்<br>***3. காலப்பகுதி***<br>▪ 1.5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை (கீழே குறிப்பிடப்பட்டுள்ள சலுகைக் காலம் உள்ளடங்கலாக)<br>▪ சலுகைக் காலம் - 1 மாதம் முதல் 2 வருடங்கள் வரை<br>***4. மூலதனக் கடனை மீளச்செலுத்துதல்***<br>▪ ஒவ்வொரு மாதமும் செலுத்தலாம்<br>▪ குறித்த செயற்திட்டத்தின் அல்லது நிறுவனத்தின் காசுப் போக்கிற்கு அமைவாக மீளச்செலுத்தும் தவணைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன<br>***5. பாதுகாப்பு***<br>▪ குறித்த செயற்திட்டத்தின் தன்மையில் தங்கியுள்ளது.<br>▪ பொதுவாக நோக்குமிடத்து செயற்திட்டம் /நிறுவனத்தின் சொத்துகள், நிறுவனத்தின் பங்குகள், கூட்டாண்மை உத்தரவாதம், தனிப்பட்ட உத்தரவாதங்கள் மற்றும் ஏனைய பாதுகாப்புகள் மீதான அடைமானம், விரிவான தீங்குக் குறைப்பு ஆய்வுகளின் முடிவில் கோரப்படலாம்<br>▪ கோரப்படுதலுக்கு இணங்க, ஏனைய வேறு கடன் மேம்படுத்தல்கள்<br><br>***6. கட்டணங்கள்***<br>▪ முன்நிறுத்தக் கட்டணம் - அளிக்கப்படும் கடனுதவியின் 0.25% முதல் 1.5%ஆகியவற்றுக்கிடையில்<br>▪ சட்டவாக்க கட்டணங்கள் - குறித்த கடனுதவியின் 0.2% அளவு<br>▪ முத்திரை வரி மற்றும் ஏனைய நியமக் கட்டணங்கள் - அரசாங்க ஒழுங்கமைவுகளுக்கு அமைவாக<br>▪ இரத்துச்செய்தல் கட்டணம் – 0.75%<br>▪ பொறுப்புக் கட்டணம் – 1.0%<br>▪ முன்கொடுப்பனவு சேதங்கள் - குறித்த கடனுதவி முன்கொடுப்பனவு செய்யப்பட்ட வேளையின் அடிப்படையிலான சதவீதம் மற்றும் குறித்த கடனுதவி அளிக்கப்படுதல் அளிக்கப்பட்ட வேளை ஆகியவற்றின் படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | துணைத்தலைவர் அவர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம் | ▪ LC / கப்பல் போக்குவரத்து உத்தரவாதம்/ வங்கி உத்தரவாதக் கட்டணம் - வங்கியின் நியம கட்டண கட்டமைப்பின் அடிப்படையில் அறவிடப்படும்<br>▪ நிகழ்வுக் கட்டணம் - ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையில<br>▪ ஏனைய கட்டணங்கள்- |
| **எதிர்கால பெறத்தக்கவைகளின் பாதுகாப்பு பத்திரமயமாக்கல்** | நிதி / லீசிங் நிறுவனங்கள், பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடும் கம்பனிகளிடமிருந்து எதிர்காலத்தில் பெறத்தக்கவைகள் | | 1. மேற்குறிப்பிட்டவாறு NDB இனை தொடர்பு கொள்ளுங்கள் அல்லது NDB முதலீட்டு வங்கியினை (NDBIB) 2300385 என்ற இலக்கத்தினூடாக அழைத்து குறித்த பரிமாற்றத்தை ஆரம்பிக்க தேவையான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுங்கள்.<br>2. NDBIB ஆனது ஆரம்பகட்ட தீங்குக்குறைப்பு ஆய்வுகளை முன்னெடுப்பதுடன், பரந்தளவான விதிகளை NDB உடன் தொடர்பாடல் செய்தலை மேற்கொள்ளும்<br>3. NDBIB ஆனது NDB ற்கு தகவல் குறிப்பாணையினை வழங்கும்.<br>4. குறித்த குறிப்பாணை கிடைக்கப்பெற்றதும், NDB இல் உள்ள தொடர்பாடல் முகாமையாளர், முன்மொழியப்பட்ட பரிவர்த்தனையினையும், நிறுவனம் அளிக்கும் பாதுகாப்பு பத்திரமயமாக்கல் ஆகியனவற்றையும் மதிப்பாய்வு செய்வார்.<br>5. தொடர்பாடல் முகாமையாளர் தொடர்ந்து முதற்கட்ட அறிக்கையினை ஆரம்ப அனுமதியை பெறும்வகையில் கடன் வழங்கல் குழுவுக்கு அனுப்பி வைப்பார்<br>6. ஆரம்ப அனுமதி பெறப்பட்டதும், விரிவான தீங்குக்குறைப்பு ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதுடன், குறித்த கடனுதவியினை பெற்றுக்கொள்ளும் வகையில் முறையான அனுமதி அளிக்கப்படும்<br>7. தேவையான சட்டபூர்வ / பாதுகாப்பு பிணை ஆவணங்கள் செயல்படுத்தப்பட்டதும், குறித்த கடனுதவியானது வழங்கப்படும்<br>8. **முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகள்** - செயற்திட்ட முற்காப்பு நிதி வழங்கல் உதவி துணைத்தலைவர் அவர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம் | நெறிமுறைகளாகும். எனினும், செயற்திட்டங்கள் ஒவ்வொன்றின் இயல்பு மற்றும் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் ஆகியனவற்றின் அடிப்படையில் இவை மாறுபாட்டுக்கு உட்படக்கூடும். மற்றும்<br>*1. **நிதியீட்டக் கட்டமைப்பு***<br>▪ NDB இன் பங்களிப்பு– கடன் தேவையை பொறுத்து வெளியீட்டு மதிப்பில் 0% - 100%<br>*2. **வட்டி வீதம்***<br>▪ ஒவ்வொரு கருவியினதும் முதிர்வினைத் தொடர்ந்து செலுத்தப்படலாம்<br>▪ ரூபாய் கடனுதவியின் அடிப்படையில் - இடையில் AWPLR + 2.0% p.a முதல் 3.0% p.a<br>▪ வட்டியானது கூட்டு அடிப்படையில் கணிப்பிடப்படும்<br>***3. காலப்பகுதி***<br>▪ 1.5 வருடங்கள் முதல் 4 வருடங்கள் tiu<br>▪ சலுகைக் காலம் - 1 மாதம் முதல் 12 மாதங்கள் வரை<br>***4. மூலதனக் கடனை மீளச்செலுத்துதல***<br>▪ கருவியின் முதிர்வானது மாதாந்த அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளது<br>▪ குறித்த செயற்திட்டத்தின் அல்லது நிறுவனத்தின் காசுப் போக்கிற்கு அமைவாக மீளச்செலுத்தும் தவணைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன<br>***5. பாதுகாப்பு***<br>▪ எதிர்கால பெறத்தக்கவைகளின் அடமானம் / சொத்துரிமைப் பத்திரம்<br>▪ தொழிற்துறை / நிறுவனத்திற்கு பொருத்தமான வேறு ஏதாயினும் கடன் மேம்படுத்தல்கள் /பிணைகள<br>6. ***கட்டணங்கள்***<br>▪ முன்நிறுத்தக் கட்டணம் - அளிக்கப்படும் கடனுதவியின் ரூ. 500,000 முதல் 0.5% வரை<br>▪ ஒப்பந்த முகவரின் கட்டணம் - முதல் வருடத்தில் ரூ. 150,000 தொடர்ந்து வரும் ஒவ்வொரு வருடங்களுக்கும் ரூ. 200,000<br>▪ ஏற்பாட்டாளர் கட்டணங்கள் மற்றும் சட்டவாக்க கட்டணங்கள் - NDBIB இன் நியம ஒழுங்கமைப்பின் அடிப்படையில் அறவிடப்படும்<br>▪ நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டணம் - நம்பிக்கைப் பொறுப்பாளரிற்கு இணங்க அறவிடப்படும் |